**கவனிக்க.-** 2016.08.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2016 ஆம் ஆண்டிற்கான குருநாகல் மற்றும் குளியாப்பிட்டி நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1982 - 2016 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2016.08.26

1982 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் – வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1540 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மேல் மாகாண அரசாங்க சேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரம்/அபிவிருத்தி உத்தியோகத்தர் (சட்டம்) III ஆம் தரம்/அபிவிருத்தி உத்தியோகத்தர் (தகவல்தொழில்நுட்பம்) III ஆம் தர பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2016

மேல் மாகாண அரசாங்க சேவையில் கீழே குறிப்பிடப்படும் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ் உள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் உள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* மேல் மாகாண அரசாங்க சேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தர பதவிகள்
* மேல் மாகாண அரசாங்க சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (சட்டம்) III ஆம் தர பதவிகள்
* மேல் மாகாண விவசாயம் மற்றும் சுற்றாடல் அமைச்சில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) III ஆம் தர பதவிகள்

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2016.09.15 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்கான சகல தகைமைகளும் 2016.09.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பொது தகைமைகள்:**
(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
(ஆ) நன்னடத்தை மற்றும் உடல் மற்றும் உளரீதியான தகைமைகளைப் பெற்றிருத்தல்;
(இ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அண்மித்த 03 வருடங்கள் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடவாளராக இருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனை**.- இப்பதவி நிரந்தரமானது, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் சேவை நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை**:- நிலவுகின்ற வெற்றிடங்களை விஞ்சியதாக விண்ணப்பங்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில், எழுத்துமூல பரீட்சையொன்றின் பெறுபேறுக்கு அமைய திறமை ஒழுங்குகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து பரீட்சிக்கப்பட்டு பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

6. **கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தர பதவி**:-

6.1 **கல்வித்தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்று பெற்றிருத்தல்.

6.2 **வயதெல்லை**.- வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6.3 **சம்பள அளவுத்திட்டம்**.- பொ. நி. சு. 06/2006 (iv) இற்கு அமைவாக ரூபா 15,215- 10×215 - 4×240 - 7×320- 15×360- ரூபா 25,965 ஆகும் (MN4-2006A).

6.4 **எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்**.- இந்தப் போட்டிப் பரீட்சை பாடங்கள் இரண்டைக் கொண்ட இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்த அளவு 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6.4.1 *பொது உளச்சார்பு பரீட்சை நேரம்* - 01 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்
பரீட்சார்த்தியின் மொழித் திறமை, விவாதிக்கும் திறன், கணிதவியல் திறன் போன்றவற்றில் பரீட்சிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கும்.

6.4.2 *பொது அறிவு* : நேரம் - 1 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்
பொருளாதாரம், அரசியல், கல்வி, சமூக, கலாச்சாரம், விஞ்ஞான ரீதியிலான மற்றும் விளையாட்டுத் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள காலத்தின் நிகழ்வுகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிக்கும் வகையில் அமைந்துள்ள வினாப்பத்திரமாகும்.

7. **அபிவிருத்தி உத்தியோகத்தர் (சட்டம்) III ஆம் தர பதவி**:-

7.1 **கல்வித்தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

7.2 **வயதெல்லை**.- வயது 21 வருடங்களுக்கு குறையாமலும் மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7.3 **சம்பள அளவுத்திட்டம்**.- பொ. நி. சு. 06/ 2006 (iv) அமைவாக ரூபா 15,215- 10 ×215 - 4 ×240 - 7×320- 15×360- ரூபா 25,965 ஆகும் (MN4-2006A).

7.4 **எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்.**- இந்தப் போட்டிப் பரீட்சை மூன்று பாடங்களைக் கொண்ட மூன்று வினாப்பத்திரங்களைக் கொண்டிருப்பதுடன் சித்தி அடைவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்த அளவாக 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.4.1 *நுண்ணறிவுப் பரீட்சை* (நேரம் - 1 1/2 மணித்தியாலம் - 100 புள்ளி)
பரீட்சார்த்தியின் கருத்து வெளியீடு, சுருக்கவுரை, உச்சரிப்பு, பொதுவான வாக்கியங்கள், விவரண தன்மை தொடர்பாக பரீட்சிக்கப்படும்.

7.4.2 *பொது அறிவுப் பரீட்சை* : (நேரம் 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)
உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற முக்கியமான காலத்தின் நிகழ்வுகள் தொடர்பான அறிவை அளவிடுவதற்கான வினாப்பத்திரம்.

7.4.3 *பொது உளச்சார்புப் பரீட்சை* : (காலம் 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)
பரீட்சார்த்தியின் வாதிடும் திறமை, பகுப்பாய்வு மற்றும் தொகுப்பு போன்ற திறன்களை அளவிடுவதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமொன்று.

8. **அபிவிருத்தி உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) III ஆம் தரப் பதவி:-**

8.1 **கல்வித்தகைமை.**- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமொன்றை அல்லது தகவல் தொழில்நுட்பம் பாடத்தை பிரதான பாடமாக உள்ளடக்கி பட்டமொன்றை பெற்றிருத்தல்.

8.2 **தொழில்சார் அனுபவம்.**- கணினி விஞ்ஞானம் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானம் பாடத்துடன் பட்டமொன்றை பெற்றிருப்பதுடன், அத்துடன் கணினித்துறையில் 2 வருடம் தொழில்ரீதியான அனுபவத்தைப் பெற்றிருத்தல் (சான்றிதழ் ஊடாக உறுதிப்படுத்தல்)

8.3 **வயதெல்லை.**- வயது 24 வருடங்களுக்கு குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க, மாகாண அரச சேவையின் ஈடுபட்டுள்ளவர்களுக்காக இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

8.4 **சம்பள அளவுத்திட்டம்.**- பொ. நி. சு. 06/2006 (iv) அமைவாக ரூபா 15,215- 10 ×215 - 4 ×240 - 7×320- 15×360- ரூபா 25,965 ஆகும் (MN4-2006A).

8.5 **எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்.**- இந்தப் போட்டிப் பரீட்சை பாடங்கள் இரண்டைக் கொண்ட இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்த அளவு 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

8.5.1 *நுண்ணறிவுப் பரீட்சை.*- (நேரம் - 1 1/2 மணித்தியாலம் 100 புள்ளி)
தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பொது அறிவைப் பரீட்சித்துப் பார்க்கும் வினாப்பத்திரமொன்றுக்கு தோற்ற வேண்டியுள்ளதுடன். அவற்றில் எழுத்துமூலமான வினாக்களும் அது போன்று பல்தேர்வு வினாக்களும் அதில் அடங்கும். செயற்பாட்டு முறைமை, மென்பொருள், வன்பொருள், தரவு முகாமைத்துவம், சர்வதேச வலைப்பின்னல், எலக்ரோனிக் மின் அஞ்சல் ஆகிய துறைகளில் பரீட்சார்த்தி பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்.

8.5.2 *பொது அறிவுப் பரீட்சை* : (நேரம் 1 மணித்தியாலயம் -100 புள்ளிகள்)
விண்ணப்பத்தாரி புள்ளிவிபர துறையிலுள்ள திறமை பொது அறிவை பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட கணிதவியலிலுள்ள பிரச்சினைகள் உட்படுத்தப்பட்ட வினாப்பத்திரமொன்றுக்கு தோற்ற வேண்டியுள்ளது.

9. **விண்ணப்பிக்கும் முறை** :-

9.1 ஒரு பதவிக்காக பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இந்தப் பரீட்சைக் கட்டணம் மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் காரியாலயத்திலும் மேல் மாகாண வருமான தலைப்பு 20-03-02-99க்குவரவிடப்படும் விதத்தில் பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் கழராதவாறு ஒட்டி அனுப்ப வேண்டும். (பதவிகள் பலவற்றிற்காக விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்காகவும் தனித்தனியாக விண்ணப்பிப்பதுடன் பரீட்சைக் கட்டணம் வெவ்வேறாக செலுத்தப்பட வேண்டும்.)

9.2 இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக பிழையின்றி பூர்த்தி செய்து 2016.09.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு (மே. மா) இலக்கம் 109, பிரதான வீதி பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்கள் இடப்பட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய பதவியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன் உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் தேவையான தகமைகளைப் பூர்த்தி செய்யாத மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

9.3 இந்த விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள/ படாத அனைத்து விடயங்கள் பற்றி இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

வீ. ராஜபக்ஷ,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
கொழும்பு - 07,
2016.08.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரம்/அபிருத்தி உத்தியோகத்தர் (சட்டம்) III ஆம் தரம்/அபிவிருத்தி உத்தியோகத்தர் (தகவல்தொழில்நுட்பம்) III ஆம் தர பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2016**

பரீட்சை இலக்கம் : [ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :-

(இ) முழுப்பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்தில்) :-

(ஈ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :- [ | | | | | | | | | | ]

2. அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பிக்கும பதவியின் பெயர் :-----. [ ]

3. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :-----.

(உரிய கூட்டினுள் " √ " அடையாளமிடுக) சிங்களம் [ ] தமிழ் [ ]

4. பிரவேசப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-

(i) நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :-----.

(ii) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

(iii) நிரந்தர வதிவு மாவட்டம் : (உரிய கூட்டினுள் " √ " அடையாளமிடுக) :-

கொழும்பு [ ] கம்பஹா [ ] களுத்துறை [ ]

(iv) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியான 2016.09.15 ஆந் திகதிக்கு

மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவு ............... வருடங்கள் ............. மாதங்கள் ................ நாட்கள்.

(v) தொலைபேசி இலக்கம் :-----.

5. பிறந்த திகதி :- ஆண்டு ................. மாதம் ....................... திகதி ...........................

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதியன்று 2016.09.15 ஆந் திகதியன்று வயது :

...................... வருடங்கள் ................. மாதங்கள் ....................... நாட்கள்.

6. ஆண்/பெண் தன்மை - (உரிய கூட்டினுள் " √ " அடையாளமிடுக)

ஆண் ☐ பெண் ☐

7. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :-

(i) பெறப்பட்டுள்ள பட்டம் :-

(ii) பட்டப்படிப்பின்போது கற்ற பிரதான பாடம் :-

(iii) பல்கலைக்கழகத்தின் பெயர் :-

(iv) பட்டப்படிப்பு சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :-

(பட்டப்படிப்பு சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டு அனுப்புதல் வேண்டும்.)

**(அபிவிருத்தி உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) III ஆம் தரத்தின் பதவிக்கான விண்ணப்பத்தாரிகள் தகவல் தொழில்நுட்பம் பாடத்தை பிரதான பாடமாக கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்குரிய பாட அட்டவணையின் பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)**

07.01 **அபிவிருத்தி உத்தியோகத்தர் (தகவல் தொழில்நுட்பம்) III ஆம் தரத்தின் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்கும் ஏற்புடையதாகும்.**

தொழில்ரீதியான அனுபவம் (சான்றிதழின் பிரதியொன்று இணைத்து அனுப்புக)

நிறுவனம் ...............................

கால எல்லை .......................... தொடக்கம் ....................... வரை

(இந்த தகவல்களை தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடப்படாத மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யாதுள்ள விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.)

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :.......................

திகதி :......................

பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் அலுவலகம் :...........

| |
|---|
| பற்றுச்சீட்டை இந்தக் கூட்டினுள் கழன்று போகாமல் ஒட்டவும். |

9. .............. ஆகிய என்னால் இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என தெரியவந்தால் என்னால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள மேல் உள்ள பதவிக்கு நியமிப்பதற்காகவுள்ள

எனது உரிமை கவனத்தில் கொள்ளப்படாமல் இருப்பதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியும் என்பதை நான் நன்றாக அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளுக்கு நான் கீழ்ப்படிவேன் என அறிவிக்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

(தேவையற்ற வசனங்களை வெட்டி விடவும்)

இவ்விண்ணப்பம் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .......................... என்பவரை தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் எனவும் அவர் ....................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

---------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் பெயர் :-
பதவி மற்றும் உத்தியோக முத்திரை :-

திகதி :----.

இந்தச் சான்றிதழ் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/முப்படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அல்லது வருடாந்தம் 2,40,360 ரூபாவுக்கு குறையாத திரட்டிய சம்பளத்தைப் பெறும் நிரந்தர பதவி வகிக்கும் அரசாங்க மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

**அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிக்காக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

திரு./ திருமதி/ செல்வி ............................................................... தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தில் ............................. ஆக நிரந்தர ஓய்வூதியம் உள்ள பதவியொன்றில் சேவையாற்றுகின்றார் எனவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், உறுதிப்படுத்துவதுடன் இந்தப் பரீட்சையின் பெறுபேறுக்கு அமைய நியமனத்திற்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத்தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :----.

8-741

**மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016*

*மத்திய மாகாண அரசாங்க சேவையில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய மாகாணத்தில் வசிக்கும் தகுதியுடைய ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1.* **பொதுத் தகைமைகள்**

*1.1* **திறந்த ஆட்சேர்ப்பு முறை**

*1.1.1 விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.*

*1.1.2 விண்ணப்பதாரி நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.*

*1.1.3 விண்ணப்பதாரி விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதியில் (2016.09.22) மத்திய மாகாணத்தில் அண்ணளவாக 03 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தல் வேண்டும்.*

*1.1.4 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*1.1.5 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் 21 வயதுக்கு குறையாத வராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.*

*1.2* **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறை**

*1.2.1 மேலே 1.1.1 முதல் 1.1.4 வரை குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகள் அவ்வாறே செல்லுபடியாகும்.*

*1.2.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் 21 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். கூடிய வயதெல்லை ஏற்புடையதன்று.*

*2.* **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் 2016.09.22 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

| *முறைமை* | *கல்வித்தகைமைகள்* | *அனுபவம்* |
|---|---|---|
| திறந்த ஆட்சேர்ப்பு முறை | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் (பொருளியல், சமூகவியல் ஆகிய துறைகளில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் அல்லது மேற்படி பாடங்களை பட்டப்படிப்பின் போது ஒரு பாடமாகப் பயின்றிருத்தல்) | ஏற்புடையதன்று |
| மட்டுப்படத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறை | மேற்குறிப்பிடப்பட்ட அதே தகைமைகள் | மத்திய மாகாண அரச சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது 05 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல். |

*3.* **சம்பள அளவுத்திட்டம்**.*- 3/2016 ஆம் இலக்க MN 04-2016 அரச நிருவாக சுற்றறிக்கையின் படி மத்திய மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உரித்தான சம்பளத் திட்டம் பின்வருமாறு:*

*மாதாந்தம் ரூபா 31,490-10 × 445-11 × 660-10 × 730-5 × 750 - ரூபா 54,250 ஆகும்.*

*(அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 சுற்றறிக்கையின் உப பிரிவு 11 இற்கமைய 2016.01.01 ஆந் திகதிக்கு சம்பளம் 18,470 ஆகும். இச்சுற்றறிக்கையின் படி சம்பள அளவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்)*

4. **நியமன நியதிகள்**.- மேற்படி பதவிக்கு உரியதாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டிருக்கும் நியமன சுற்று நிருபத்தின் அடிப்படையில் நியமன நியதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

5. **நியமனம் செய்யும் முறை**:- நிலவும் வெற்றிடங்களில் 70 வீதமானவை திறந்த ஆட்சேர்ப்பு முறையிலும் 30 வீதமானவை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறையிலுமாக மேற்கொள்ளப்படும். திறந்த ஆட்சேர்ப்பு முறை அரச நிர்வாகச் சுற்றறிக்கை 15/90 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் நியதிகளுக்கு அமைய மாவட்ட சனத்தொகையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இவ்வாட்சேர்ப்பு முறையானது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் எழுத்துமூலப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு, அப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படும். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. எழுத்துப் பரீட்சையின்போது ஒவ்வொரு பாடத்திற்குமாக 40 புள்ளிகளிலும் குறைவாகப் பெற்றுக்கொண்டோர் ஆட்சேர்ப்பு நியதிகளுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

6. **சேவை நியதிகள்**.-

6.1. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்தடையது.

6.2 இப்பதவியானது அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் சம்மந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் அரச நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் இத்துடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு உரித்துடையதாகும்.

6.3 இப்பதவியில் நியமிக்கப்பட்ட காலம் முதல் மத்திய மாகாணத்தில் குறைந்தது 5 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். இக்காலப்பகுதியில் மத்திய மாகாணத்திற்கு வெளியே இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பிக்கும் முறை**:-

7.1 பரீட்சைக் கட்டணம் ரூ. 600. இப்பரீட்சைக் கட்டணமானது மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமான தலைப்பில் 20-03-02-13 என்ற கணக்கிற்கு மத்திய மாகாணத்திலுள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் காரியாலயத்திலும் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியனுப்புதல் வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டு ஒட்டப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீள செலுத்தப்படமாட்டாது.

7.2 விண்ணப்பப்படிவங்கள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு 2016.09.22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை குறித்து அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " மத்திய மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016" எனக் குறிப்பிடுவதோடு வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்ப இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்து போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் இவ்வாணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

8. **பரீட்சை மொழி மூலம்**.- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப்பதாரி விண்ணப்பத்தில் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தை ஒதுக்கப்பட்ட பகுதியில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது.

9. **பரீட்சை நிலையம்**.- பரீட்சை நிலையம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் தெரியப்படுத்தப்படும்.

10. **எழுத்து மூலப் பரீட்சையும் விடயப்பரப்பும்**.- திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் இருசாராரையும் இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் பாடங்கள் மற்றும் பாடப்பரப்பு உள்ளடங்கிய எழுத்து மூலப் பரீட்சை நடாத்தப்படும்.

10.1 நுண்ணறிவும் தர்க்கமும் - ( காலம் - 1 மணித்தியாலம் ) - (புள்ளிகள் 100)
மொழிப் பிரயோகம், கணித அறிவு, தர்க்க ஆற்றல் மற்றும் பொது அறிவு என்பவற்றை பரீட்சிப்பதற்கான சுருக்க வினா மற்றும் பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கிய வினாத்தாள்.

10.2 பொது அறிவும் விடயப் பரப்பும் - ( காலம் - 2 மணித்தியாலம் ) - (புள்ளிகள் 100)
இவ்வினாத்தாள் கிராம அபிவிருத்தி சம்மந்தமான தகவல்கள் மற்றும் தற்கால சமூக, அரசியல் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

11. **விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள்**:- இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 (A4)அளவு தாளில் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-5

வரையான விடயங்களையும் மீதமானவை இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் தட்டெழுத்து மூலமாகவோ தெளிவான கையெழுத்தினாலோ நிரப்பப்படலாம். விண்ணப்பங்கள் நிரப்பப்படும்போது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அடையாள இலக்கங்களைக் குறிப்பிட்ட பெட்டியினுள் தெளிவாக இடுதல் வேண்டும்.

11.1 விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமே விண்ணப்பிக்கும் மாவட்டம் என்பதில் குறிப்பிடப்படல் வேண்டும்.
கண்டி - 01
மாத்தளை - 02
நுவரெலியா - 03

11.2 விண்ணப்பத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்க கல்லூரியின் அதிபர், சமாதான நீதவான், சத்திய பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு அல்லது வருடாந்தம் ரூபா 2,40,360 இற்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியொன்றில் வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

11.3 எந்தவொரு விண்ணப்பதாரியும் பதவியில் அமர்த்தப்படும் முன்னர் அல்லது பதவியில் அமர்த்தப்பட்ட பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பதவி இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவார்.

11.4 தற்போது அரச சேவையில் மாகாண அரச சேவையில் பணிபுரிவோர் தம்முடைய விண்ணப்பங்களை தம்முடைய திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

12 இப்பரீட்சையை நடாத்துதல், நடாத்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆகியன மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்குறியதாகும். அவ்வாறே இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள், தெளிவில்லாத விடயங்கள் என்பன குறித்தும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இவ்வாணைக்குழுவிற்கேயுரியதாகும்.

ஆர். எம். என். ரத்நாயக்க,
செயலாளர்,
மாகாண அரசசேவை ஆணைக்குழு,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழு,
இல 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2016, ஓகத்து 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசசேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2016**

பரீட்சை இலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்திற்காக)

(கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீடுகளையும்/இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ] சிங்களம்-S தமிழ்-T ஆங்கிலம்- E
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

பரீட்சை வகை [ ] (திறந்த -01, மட்டுப்படுத்தப்பட்ட -02)

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

1. விண்ணப்பதாரரின் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
Mr/Mrs/Miss (ஆங்கில பெரிய எழுத்தில்)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : (சிங்களத்தில் /தமிழில்)
திரு./திருமதி/செல்வி :-----.

1.3 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

1.4 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் : (சிங்களத்தில் /தமிழில்) :-----.

2. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.

2.2 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

2.3 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.

2.4 தற்போது அரச சேவையில் சேவையாற்றின் அலுவலக முகவரி :-----.

2.5 தொலைபேசி இலக்கம் :- | | | | | | | | | | |

3. 3.1 பிறந்த திகதி :
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி: | | |

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு 2016.09.22 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- | | | | | | | | | | |

4. பால் : (ஆண் /பெண்) :-----.

5. 5.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம்:-----.

| தேர்தல் இடாப்பிற்கேற்ப பதிவு | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| வாக்காளர் தொகுதி | | | |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | | | |
| பெயருக்கு முன்னால் உள்ள தொடர் இலக்கம் | | | |

6. கல்வித் தகைமைகள் :-

| பல்கலைக்கழகம் | பெற்றுள்ள பட்டம் | பாடங்கள் | சான்றிதழின் இலக்கமும் பட்டம் செல்லுபடியாகும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |

7. அனுபவம் (மட்டுப்படுத்தப்பட்ட முறையின்கீழ் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் மட்டும்) :-----.

7.1 தற்போதைய சேவை நிலையத்தின் பெயர் :-----.

7.2 அச்சேவை நிலையம் உரித்துடைய திணைக்களம் அல்லது அமைச்சு :-----.

7.3 தற்போது வகிக்கும் பதவி :-----.

7.4 அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

7.5 அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :-----.

7.6 அப்பதவியில் 2016.09.22 ஆந் திகதிக்கு சேவைக் காலம் வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

7.7 தற்போது வகிக்கும் பதவி ஓய்வூதியம் உரித்துடையதா என்பது பற்றி :-----.

8. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :-----.
   (i) பணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.
   (ii) திகதி :-----.
   (iii) பற்றுச்சீட்டின் இலக்கம் :-----.

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

**பரீட்சார்த்தியின் உறுதியுரை :-**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடந்து கொள்ளவும், இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவர் என காணப்படின் பரீட்சையின் போதோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்தி உரிமை இரத்து செய்வதற்காக எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகின்றேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்:**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................................................ என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் ............................. ஆந் திகதி எனது முன்னிலையில் அவர், தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி :-----.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.

10. **அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களாயின் பின்வரும் பகுதி திணைக்களத் தலைவரினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .................................................................... இத்திணைக்களத்தில்/ அமைச்சில்/..................................... ஆக சேவை புரிகின்றார் எனவும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் இவர் எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படவில்லை எனவும் மேற்படி பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இவரை பதவியிலிருந்து விடுவிக்கலாம் எனவும் உறுதியளிக்கிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :-----.

8-785

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.